**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 102/ந/2022
நாள்.07.10.2022

திரு. S.திருமூர்த்தி,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், ரேஸ் கோர்ஸ், 164, கோவை மாவட்ட செயல் அலுவலகம், ஊழல் எதிர்ப்பு இயக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.திருமூர்த்தி என்பவரின் 01.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2022 அன்று பெறப்பட்டு 102/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், ரேஸ் கோர்ஸ், 164, கோவை மாவட்ட செயல் அலுவலகம், ஊழல் எதிர்ப்பு இயக்கம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.திருமூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“கட்டிட அனுமதி எண்கள் (1) 94/2019, (2) 14/2020, (3) 44/2020, (4) 56/2020, (5) 57/2020, (6) 74/2020, (7) 76/2020 மற்றும் (8) 96/2020 இவைகளுக்கு அனுமதி எண் பெற்ற கமர்சியல் கட்டடங்கள், அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன, குறைந்தளவே சொத்துவரி விதித்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகவே தாங்கள் தனி குழு அமைத்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் தனது 05.08.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மேட்டுப்பாளையம் நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி எண்கள். 94/2019, 14/2020, 44/2020, 56/2020, 57/2020, 74/2020, 76/2020, 96/2020 ஆகிய வணிக மற்றும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பரப்பளவுக்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கு குறைந்த அளவே சொத்துவரி விதிக்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட கட்டடங்களை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில், மனுதாரர் தெரிவித்துள்ள கட்டடங்களுக்கு கட்டட உரிமையாளரால் கட்டடம் கட்டப்பட்ட அளவுகளின்படி வரிவிதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டட அனுமதி எண்களுக்கான வரைப்படம் மற்றும் அதன் பரப்பளவு, கட்டடத்தின் பயன்பாடு ஆகியவை வரிவிதிப்பு செய்யப்படும் மாதாந்திர பட்டியலுடன் (ML) ஒப்பீடு செய்யப்பட்டது.

| வ. எண். | கட்டட அனுமதி எண். | கட்டட அனுமதி பெற்ற சதுரடி | கட்டடம் கட்டப்பட்ட சதுரடி | வரிவிதிப்பு செய்யப்பட்ட சதுரடி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 94/2019 | 990 தரைத்தளம் | 2120 | 2120 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| | | 990 முதல்தளம் | 2610 | 2610 முதல் தளம் | |
| | மொத்தம் | | 4730 | 4730 | |
| 2 | 14/2020 | 1924 தரைத்தளம் | 342 | 342 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| | | | 186 | 186 தரைத்தளம் | |
| | | | 170 | 170 தரைத்தளம் | |
| | | | 177 | 177 தரைத்தளம் | |
| | | | 171 | 171 தரைத்தளம் | |
| | | | 177 | 177 தரைத்தளம் | |
| | | | 179 | 179 தரைத்தளம் | |
| | | | 179 | 179 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தரைத்தளம் | |
| | | | 179 | 179 தரைத்தளம் | |
| | | | 179 | 179 தரைத்தளம் | |
| மொத்தம் | | | 1939 | 1939 | |
| 3 | 44/2020 | 1354 தரைத்தளம் | 919 | 919 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| | | | 1081 | 1081 தரைத்தளம் | |
| | | 781.5 முதல்தளம் | 700 | 700 முதல் தளம் | |
| | | | 700 | 700 முதல் தளம் | |
| | | | 1100 | 1100 இரண்டாம் தளம் | |
| | | | 900 | 900 இரண்டாம் தளம் | |
| மொத்தம் | | | 3400 | 3400 | |
| 4 | 56/2020 | 218.75 தரைத்தளம் | 432 | 432 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது |
| | | 218.75 முதல்தளம் | 400 | 400 முதல்தளம் | |
| மொத்தம் | | | 832 | 832 | |
| 5 | 57/2020 | 990 தரைத்தளம் | 2120 | 2120 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது |
| | | 990 முதல்தளம் | 2610 | 2610 முதல் தளம் | |
| மொத்தம் | | | 4730 | 4730 | |
| 6 | 74/2020 | 620.2 தரைத்தளம் | 160 | 160 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட குறைத்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது |
| | | | 160 | 160 தரைத்தளம் | |
| | | | 160 | 160 தரைத்தளம் | |
| மொத்தம் | | | 480 | 480 | |
| 7 | | | 810 | 810 தரைகீழ்த் தளம் | |
| | | 525 தரைத்தளம் | 1162 | 1162 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 76/2020 | 525 முதல்தளம் | 581 | 581 முதல் தளம் | கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது |
| | | | 581 | 581 முதல் தளம் | |
| | மொத்தம் | | 3134 | 3134 | |
| 8 | 96/2020 | 453.5 தரைத்தளம் | 900 | 900 தரைத்தளம் | கட்டட அனுமதி பரப்பளவை விட கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது |
| | | 453.5 முதல் தளம் | 900 | 900 முதல்தளம் | |
| | | 453.5 இரண்டாம் தளம் | 900 | 900 இரண்டாம் தளம் | |
| | மொத்தம் | | 2700 | 2700 | |

மேற்கண்ட ஒப்பீடு பட்டியல்படி மனுதாரர் குறிப்பிட்டவாறு கட்டப்பட்ட கட்டடங்களுக்கு குறைந்தளவு வரி விதிக்கப்படவில்லை. அக்கட்டடம் கட்டப்பட்ட கட்டுமான பரப்புக்கே வரி விதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதில் சொத்துவரி வருவாய் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கட்டட வரைபட நகல் கட்டட அனுமதி உத்தரவு நகல், வரிவிதிப்பு செய்யப்பட்ட மாதாந்திர பட்டியல் (ML) நகல் மற்றும் மேற்கண்ட இனங்களின் ஒப்புநோக்கு செய்யப்பட்ட பட்டியல் ஆகியவை முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, புகார் மனுதாரர் திரு.எஸ்.திருமூர்த்தி என்பவர் தெரிவித்துள்ளபடி வருவாய் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதாலும் புகார் மனு உண்மைக்கு புறம்பாக உள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்யவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரும் 19.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.08.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. S. திருமூர்த்தி, 19.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராட்சியில் அமைந்துள்ள கட்டடங்களுக்கு கட்டட அனுமதி வழங்கியதற்கு மாறாக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதில் கட்டட அனுமதி எண்கள் (1) 94/2019, (2) 14/2020 (3) 44/2020 (4) 56/2020 (5) 57/2020 (6) 74/2020, (7) 76/2020 மற்றும் (8) 96/2020 ஆகிய 8 வணிக வளாகக் கட்டடங்கள் அனுமதி பெற்றதற்கு மாறாக விதிகளை மீறி கட்டியுள்ளனர். அவற்றிற்கு சொத்து வரி விதிக்கும்போது மேற்கண்ட கட்டடங்களின் அளவுகளை குறைத்து வரிவிதிப்பு செய்துள்ளனர். இதனால் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நகராட்சியில் தகவல் வேண்டியும் மனு அளிக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இம்முறைகேடு குறித்து விசாரித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.ஆர். வினோத் மற்றும் வருவாய் ஆய்வாளரான திரு. ஆரிப்வுல்லா ஆகியோர் 19.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

“கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராட்சியில் 94/2019, 14/2020, 44/2020, 56/2020, 57/2020 , 74/2020, 76/2020 மற்றும் 96/2020 ஆகிய 8 வணிக வளாகக் கட்டடங்களுக்கு கட்டப்பட்ட பரப்பளவிற்கேற்ப சொத்து வரி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி நகராட்சி ஆணையரான என்னால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது எனவும், ஆய்வில் மேற்கண்ட கட்டடங்களின் பரப்பளவிற்கேற்ப சரியான சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மேற்கண்ட கட்டடங்கள் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதையடுத்து, ஒவ்வொரு கட்டடத்திற்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 205 (1) மற்றும் (2)வது பிரிவின் கீழ் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு நோட்டிஸ் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

| வரிசை எண் | அனுமதி எண் | உரிமையாளரின் பெயர்<br><br>திருவாளர் / திருமதி | நோட்டீஸ் வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 94/2019, | எஸ். காளராஜன் | 12.11.2021 |
| 2 | 14/2020, | பார்த்திபன் | 17.09.2020 |
| 3 | 44/2020, | எ. மகாலட்சுமி | 17.09.2020 |
| 4 | 56/2020, | ஊேறமா மற்றும் அலமேலு | 17.09.2020 |
| 5 | 57/2020 | எஸ். காளராஜன் | 12.11.2021 |
| 6 | 74/2020 | கே மகாலிங்கம் | 14.12.2021 |
| 7 | 76/2020 | கே ராமன் | 17.09.2020 |
| 8 | 96/2020 | எ. கோபால் | 14.12.2021 |

மேலும் மேற்கண்ட 8 கட்டடங்களுக்கு கட்டட அனுமதி வழங்கப்பட்ட ஆண்டு, சொத்து வரி விதிக்கப்பட்ட விவரம் மற்றும் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடங்களின் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை பட்டியலாக இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். அதே போன்று இந்நேர்வு தொடர்பான புகைப்படங்கள், மேற்கண்ட கட்டடங்களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்புகளின் நகல்கள் ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) இதனைத் தொடர்ந்து, மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர், மனுதாரால் தெரிவிக்கப்பட்ட கட்டடங்களுக்கு நகராட்சியால் அனுமதி அளிக்கப்பட்ட ஆண்டு, சொத்துவரி

விதிப்புத் தொகை, விதிமீறல் கட்டடங்களின் மீது நகரமைப்பு பிரிவினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கீழ்காணுமாறு பட்டியலாக சமர்ப்பித்துள்ளார்.

**மேட்டுப்பாளையம் நகராட்சி**

| வ. எண். | கட்டட அனுமதி எண் (ம) கட்டட உரிமையாளர் பெயர் | கட்டட அனுமதி பெற்ற சதுரடி | கட்டடம் கட்டப்பட்ட சதுரடி | கட்டட அனுமதி எண், வழங்கப்பட்ட ஆண்டு, அனுதிக்கான காலம் | சொத்துவரி விதிப்பு எண், விதிக்கப்பட்ட ஆண்டு, விதிக்கப்பட்ட தொகை (அரையாண்டிற்கு) | **விதிமீறல் கட்டடங்களின் மீது நகரமைப்பு பிரிவினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்** |
|---|---|---|---|---|---|---|
| **1** | **94/2019 எஸ்.காளராஜன்** | **990 தரைத்தளம்** | **2120** | **94/2019, 26.12.2019 முதல் 25.12.2024 வரை** | **074/027/00768 02/12/2020 ரூ 17,367/-** | **தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (12.11.2021)** |
| | | **990 முதல்தளம்** | **2610** | **94/2019, 26.12.2019 முதல் 25.12.2024 வரை** | **074/027/00770 02/12/2020 ரூ 21,381/-** | **தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (12.11.2021)** |
| | **மொத்தம்** | **1980** | **4730** | | | |
| **2** | **14/2020 சி.பார்த்திபன்** | **1924 தரைத்தளம்** | **1939** | **14/2020 21.01.2020 முதல் 20.01.2025 வரை** | **074/019/00661 15.10.2020 ரூ.933/-**<br>**074/019/00660 15.10.2020 ரூ.1523/-**<br>**074/019/00662 15.10.2020 ரூ.1393/-**<br>**074/019/00663 15.10.2020 ரூ.1450/-**<br>**074/019/00664 15.10.2020 ரூ.1400/**<br>**074/019/00665 15.10.2020 ரூ.1450/**<br>**074/019/00667 15.10.2020 ரூ.1466/**<br>**074/019/00666 15.10.2020** | **தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (17.09.2021)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூ.1466/<br>074/019/00668<br>15.10.2020<br>ரூ.1466/<br>074/019/00669<br>15.10.2020<br>ரூ.1466/– | |
| | மொத்தம் | 1924 | 1939 | | | |
| 3 | 44/2020<br>ஏ.மகாலட்சுமி,<br>திருமதி.டி.கே.<br>காமாட்சி பாபு | 1354<br>தரைத்தளம் | 2000 | 44/2020<br>09.03.2020<br>முதல்<br>08.03.2025<br>வரை | 074/007/00728<br>23.11.2020<br>ரூ.7528/–<br>074/007/00729<br>23.11.2020<br>ரூ.8825/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (17.09.2020) |
| | | 781.5<br>முதல்தளம் | 3400<br>(முதல் மற்றும் இரண்டாம் தளம்) | 44/2020<br>09.03.2020<br>முதல்<br>08.03.2025<br>வரை | 074/007/00727<br>23.11.2020<br>ரூ.5734/–<br>074/007/00726<br>23.11.2020<br>ரூ.5734/–<br>074/007/00732<br>23.11.2020<br>ரூ.2253/–<br>074/007/00731<br>23.11.2020<br>ரூ.5530/– | |
| | மொத்தம் | 2135.5 | 5400 | | | |
| 4 | 56/2020<br>ஹேமா,<br>அலமேலு | 218.75<br>தரைத்தளம் | 432 | 56/2020<br>24.03.2020<br>முதல்<br>23.03.2025<br>வரை | 074/005/00445<br>28.10.2020<br>ரூ.2723/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (17.09.2020) |
| | | 218.75<br>முதல்தளம் | 400 | 56/2020<br>24.03.2020<br>முதல்<br>23.03.2025<br>வரை | 074/005/00444<br>28.10.2020<br>ரூ.2520/– | |
| | மொத்தம் | 437.5 | 832 | | | |
| 5 | 57/2020<br>காளராஜன் | 990<br>தரைத்தளம் | 2120 | 57/2020<br>24.03.2020<br>முதல்<br>25.03.2025<br>வரை | 074/027/00769<br>02.12.2020<br>ரூ.17367/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (12.11.2021) |
| | | 990<br>முதல்தளம் | 2610 | 57/2020<br>24.03.2020<br>முதல்<br>23.03.2025<br>வரை | 074/027/00771<br>02.12.2020<br>ரூ.21381/– | |
| | மொத்தம் | 1980 | 4730 | | 4730 | |
| 6 | 74/2020 | 620.2<br>தரைத்தளம் | 480 | அனுமதிவிட குறைந்தளவு கட்டடம் கட்டியது | 074/020/00816<br>17.12.2020<br>ரூ.1009/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கே. மகாலிங்கம் | | | 19.03.2020 முதல் 18.03.2025 | 074/020/00815 17.12.2020 ரூ.1009/– | முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (14.12.2021) |
| | | | | | 074/020/00814 17.12.2020 ரூ.1009/– | |
| | மொத்தம் | 620.2 | 480 | | | |
| 7 | 76/2020 கே.ராமன் | 525 தரைத்தளம் | 1972 | 76/2020 08.06.2020 முதல் 07.06.2025 வரை | 074/021/00720 18.08.2020 ரூ.6636/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (17.09.2020) |
| | | | | | 074/021/00721 18.08.2020 ரூ.9518/– | |
| | | 525 முதல்தளம் | 1162 | 76/2020 08.06.2020 முதல் 07.06.2025 வரை | 074/021/00722 18.08.2020 ரூ.4760/– | |
| | | | | | 074/021/00723 18.08.2020 ரூ.4760/– | |
| | மொத்தம் | 1050 | 3134 | | | |
| 8 | 96/2020 ஏ.கோபால் | 453.5 தரைத்தளம் | 900 | 96/2020 06.08.2020 முதல் 05.08.2025 வரை | 074/008/00451 01.11.2020 ரூ.5671/– | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் 205(1)(2)ன் கீழ் முதல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது (14.12.2021) |
| | | 453.5 முதல் தளம் | 900 | | 074/008/00690 01.11.2020 ரூ.5671/– | |
| | | 453.5 இரண்டாம் தளம் | 900 | | 074/008/00691 01.11.2020 ரூ.4253/– | |
| | மொத்தம் | 1360.5 | 2700 | | | |

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, ஆணையர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த திரு.S.திருமூர்த்தி என்பவர் தனது முறையீட்டு மனுவில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் 8 வணிகக் கட்டடங்களில் அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விட கூடுதல் பரப்பளவில் விதிமீறி கட்டடம் கட்டியும் நகராட்சியால் குறைந்தளவு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது அதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதை புகாராக தெரிவித்து உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

- மேலும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில், மேற்காணும் கட்டடங்களில் விதிமீறி கட்டிய கூடுதல் பரப்பளவின் அளவீடுகள் மேட்டுப்பாளையம் நகராட்சியால் குறைத்து காட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். உதாரணமாக கட்டட அனுமதி எண்.94/2019–ல் நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட பரப்பளவு 1980 சதுரடி, இதற்கு பதிலாக விதிமீறி

மொத்தம் 4730 சதுரடி பரப்பளவில் முறைகேடாக கட்டப்பட்டுள்ளதாக நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் இக்கட்டடம் மொத்தம் 10,000 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது என மனுதாரர் தெரிவித்து அக்கட்டடத்தின் தோற்றத்தினை புகைப்படம் மூலமாக காண்பித்தார்.

- மேட்டுப்பாளையம் நகராட்சியில் கட்டட அனுமதி எண்கள். 94/2019, 14/2020, 44/2020, 56/2020, 57/2020, 74/2020, 76/2020 மற்றும் 96/2020 ஆகிய 8 வணிகக் கட்டடங்களின் மொத்த பரப்பளவு முறையே 1980, 1924, 2135.5, 437.5, 1980, 620.2, 1050 மற்றும் 1360.5 சதுர அடிகளில் கட்டடம் கட்ட நகராட்சியால் அனுமதியளிக்கப்பட்டதில், நகராட்சியின் விதிமீறி கூடுதலாக முறையே மொத்தம் 4730, 1939, 5400, 832, 4730, 480, 3134 மற்றும் 2700 சதுர அடிகளில் முறைகேடாக கட்டட உரிமையாளர்களால் கட்டடம் கட்டப்பட்டுள்ளது நகராட்சியால் கண்டறியப்பட்டு, கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கும் சேர்த்து சொத்துவரி நகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

- ஆனால் கட்டட அனுமதி எண்.76/2020 கட்டடத்திற்கு நகராட்சியால் கட்டடம் கட்ட அனுமதியளிக்கப்பட்ட காலம் 08.06.2020 முதல் 07.06.2025 ஆகும். இவ்வாறு இருக்கையில், மேட்டுப்பாளையம் நகராட்சியால் இக்கட்டடத்திற்கு 18.08.2020 அன்று சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதன் மூலம் கட்டட உரிமையாளரால் 2 மாதங்களுக்குள் கட்டடம் முழுவதும் கட்டியிருக்க முடியுமா என்பதும், எதன் அடிப்படையில் நகராட்சியால் சொத்துவரி நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டுள்ளது என்கிற கேள்வியும் எழுகிறது. இதே போன்றே கட்டட அனுமதி எண். 96/2020–ன் கட்டடத்திற்கு, கட்டுமான அனுமதி காலம் 06.08.2020 முதல் 05.08.2025 வரை என நிர்ணயித்துள்ள நிலையில், 3 மாத கால இடைவெளியில் 01.11.2020 அன்று முதல், நகராட்சியால் சொத்துவரி விதிக்கப்பட்டதன் மூலம், நகராட்சியின் அனுமதிக்கு முன்பே கட்டடம் கட்டப்பட்டிருக்கக் கூடும் என்கிற ஐயம் எழுகிறது.

- நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாகவும், கூடுதலாகவும் விதிமீறி கட்டிய கட்டடங்களை அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி மாற்றி அமைக்கவும் / இடித்து அப்புறப்படுத்தவும் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) மற்றும் (2)ன் கீழ் நகராட்சியால் முதல் அறிவிப்பு (நோட்டீஸ்) மட்டுமே வழங்கப்பட்டு, அதன் தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. இச்செயல் மேட்டுப்பாளையம் நகராட்சி நிர்வாக அலுவலர்களின் மெத்தனப் போக்கை காட்டுகிறது.

- மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில், மனுதாரரிடமிருந்து புகார்மனு பெறப்பட்டதும், நகராட்சியின்

ஆணையாளரான தானே அனைத்து 8 கட்டடங்களின் பரப்பளவை ஆய்வு செய்து, கூடுதலாக கட்டிய பரப்பளவிற்கே சொத்துவரி விதிக்கப்பட்டதை உறுதி செய்தும், விதிமீறல் கட்டடங்களுக்கு சட்டப்படியான உரிய அறிவிப்பும் (நோட்டீஸ்) வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து, கட்டட புகைப்படங்களும் சமர்ப்பித்துள்ளார்.

- ஆனால் மனுதாரரும் நேரடி விசாரணையில் நகராட்சியால் அறிவிப்பில் (நோட்டீஸ்) குறிப்பிடப்படும் கூடுதல் பரப்பளவின் அளவீடு மிகவும் குறைவு எனவும், அதைவிட அதிகப்பரப்பளவில் அனைத்து 8 கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன என தெரிவித்து, ஒரு கட்டடத்திற்கான புகைப்படத்தை காண்பித்தார்.

- மனுதாரர் திரு.S.திருமூர்த்தி என்பவரும், எதிர்மனுதாரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளரும் புகைப்படங்கள் மூலம் தங்களது வாதங்களை தெரிவித்துள்ள நிலையில், புகாராக தெரிவிக்கப்பட்ட 8 வணிகக் கட்டடங்களின் பரப்பளவை நேரடி ஆய்வு செய்து கணக்கீடு செய்தாலன்றி, தீர்வு காண இயலாது என்பதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் ஒரு குழுவினை அமைத்து, அக்குழு மூலம் மேட்டுப்பாளையம் நகராட்சியால் அங்கீரிக்கப்பட்ட அனுமதி எண். 94/2019, 14/2020, 44/2020, 56/2020, 57/2020, 74/2020, 76/2020 மற்றும் 96/2020 ஆகிய 8 வணிகக் கட்டடங்களின் பரப்பளவினை அளவீடு செய்து, கூடுதல் பரப்பளவில் கட்டிய கட்டடங்களில் நகராட்சியால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 205 (1) மற்றும் (2) ன் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அளவீடுகள் உள்ளனவா என்பது ஆய்வு செய்யப்படவேண்டும். மேலும் இக்குழு மூலம் மேட்டுப்பாளையம் நகராட்சியால் பராமரிக்கப்படும் கட்டடம் கட்டுவது தொடர்பான மற்றும் சொத்துவரி நிர்ணயிப்பது தொடர்பான பதிவேடுகளை ஆய்வு செய்து, நகராட்சியால் கட்டடம்கட்ட அனுமதியளிக்கப்பட்ட காலத்தினையும், கட்டடம் கட்டிமுடிக்கப்பட்ட காலத்தையும் ஒப்பீட்டு உரியமுறையில் விதிகளின்படி சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும். கட்டிட அனுமதி அளிக்கப்பட்ட அளவீடுகளைவிட இன்னும் அதிக பரப்பளவில் முறைகேடாக கட்டட உரிமையாளர்களால் கட்டடம் கட்டப்பட்டிருந்தால், அதனை கண்காணிக்கத் தவறிய மற்றும் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க தவறிய நகராட்சியின் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- தவிர இக்குழுவானது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 8 வணிகக் கட்டடங்கள் மீது ஆய்வுசெய்து, தனது அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்க ஆணையிடப்படுகிறது.

அறிக்கையின் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கை எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner of Municipal Administration is to constitute a special committee for the purpose of re-measuring the exact readings of the constructions under adverse observation and ensure that there is no loss of revenue of property tax that has to accrue to the Municipality. For the discrepancies of excess construction, if noticed during the committee's exercise, strict disciplinary action should be taken against all the filed officials including the commissioner concerned. For building plan violations the Mettupalayam Municipality should pursure action as per the rules in vogue without fear or favour. The Commissioner of Municipal Administration may keep a vigil over this as a counter check.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.திருமூர்த்தி,
ஊழல் எதிர்ப்பு இயக்கம்,
கோவை மாவட்ட செயல் அலுவலகம்,
164, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர் மாவட்டம்,

2) ஆணையாளர், மேட்டுப்பாளையம் நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்